# TAMILNADU PUBLIC SERVICE COMMISSION

## HALF YEARLY EXAMINATIONS AND LANGUAGE TESTS – MAY - 2021

## FIRST CLASS LANGUAGE TEST IN TAMIL – PART II – HIGHER STANDARD

## PAPER – II - TRANSLATION

## (FOR ASSISTANT COLLECTORS, POLICE OFFICERS AND FOREST OFFICERS)

Time : 3 Hours | Maximum Marks : 100

**(FOR FAIR HANDWRITING AND NEATNESS 5 MARKS WILL BE AWARDED)**

(தெளிவான கையெழுத்திற்கு 5 மதிப்பெண்கள்)

**I. Translate into Tamil :** (Marks : 30)

The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and over again.

**II. ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க :** (Marks : 30)

கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்களாகும். சமணத்தைச் சேர்ந்த திகம்பரத் துறவிகள் மலைக்குகையில் தங்கினர். அவர்கள் தங்களின் தங்குமிடங்களிலேயே கல்வியையும் சமயக் கருத்துகளையும் மாணவர்களுக்குக் கற்பித்தனர். 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள். அவர்களின் படுக்கைகளின் மீது மாணவர்கள் அமர்ந்து கற்றதனால் கல்விக்கூடம், பள்ளிக்கூடம் என அழைக்கப்படலாயிற்று. பள்ளி என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடையாகும்.

சமணப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு எடுத்த படுக்கைகள் பற்றித் திருச்சி மலைக்கோட்டையிலும் தமிழகத்தின் புகழ் பெற்ற சமணக்குன்றான கழுகுமலையிலும் உள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

[Turn over

**III. தமிழில் கடிதம் எழுதுதல்** (ஏதேனும் ஒன்று மட்டும்) (Marks : 35)

1. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.

2. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

3. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' – செயல்பாடு குறித்து அறிக்கை அளித்தல்.